# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.

**முன்னிலை: திருமதி.பி.கே.தமயந்தி,எம்,ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சேந்தமங்கலம்.**

**2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண். 5/2023**

**in**

**அ.வ.எண்.65/2020**

1. பொன்னுசாமி கவுண்டர் (இறந்தார்)

2. ராஜன் . . . **மனுதாரர்கள்/வாதிகள்**

**//எதிராக//**

1. செல்வம்

2. ராணி

3. ராஜம்மாள்

4. சாரதா . . . **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனுவானது என்முன்பு 12.09.2023 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, வா.சா.2 ஐ சாட்சியத்தை Defer செய்து மேற்கொண்டு அடுத்த சாட்சிகளை விசாரிக்க அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:–**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு பிரமாணப்பத்திரிக்கையில், மனுதாரர் மனுதாராார் அசல் வழக்கில் 2ம் வாதி. மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கு வா.சா.2 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இதற்கு முன்பு வா.சா.2 ஆக மாதேஸ்வரன் என்கிறவர் சாட்சியாக சமூகம் கோர்ட்டில் பிரமாண வாக்குமூலம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வா.சா.2 ஆன மாதேஸ்வரன் என்பவர் லாரியில் கிளீனராக பணிபுரிவதற்காக வடமாநிலம் சென்றுவிட்டார். ஆகையால் அவரால் தற்போதுள்ள சூழ்நிலையில் சொந்த ஊருக்கு திரும்பிவர சிலநாட்கள் கடந்து போகக்கூடிய சூழல் உள்ளது. எனவே அவரை பொறுத்த சாட்சியத்தை Defer

செய்து அடுத்து வரக்கூடிய சாட்சியை விசாரிக்க மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர்மனுஉரையின் சுருக்கம்:–**

1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில், மனுதாரர் தனது மனு அபிடவிட்டில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. வா.சா.2 ஐ Close செய்துவிட்டு அடுத்த சாட்சியை விசாரணை செய்ய வேண்டுமே தவிர வா.சா.2 ஐ ஒத்திவைத்து அடுத்த சாட்சியை விசாரிக்க எந்த ஒரு சட்டமுகாந்திரமும் இல்லை. மனுதாரர்கள் வேண்டுமென்றே காலம் கடத்துவதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஆகவே இம்மனு தள்ளுபடியாக வேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**4.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. தீர்வு:–**

வழக்காவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அசல் வழக்கு கடந்த 12.07.2013 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் 30.04.2014 தேதியில் வழக்கெழுவினா வனையப்பட்டுள்ளது. கடந்த 24.07.2023 தேதியில் மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் ஒரு மாதேஸ்வரன் என்பவர் நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல்செய்து முதல்விசாரணை செய்யப்பட்டுள்ளது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வா.சா.2 ஐ குறுக்கு விசாரணைக்கு 23.08.2023 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி சாட்சி இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. தற்போது 28.08.2023 தேதியில் மேற்படி வா.சா.2 சாட்சியின் சாட்சியத்தை ஒதுக்கிவைத்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இதர சாட்சிகளை விசாரிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனுவில் கூறப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.2 சாட்சி லாரியில் கிளீனராக பணிபுரிந்து வெளிமாநிலம் சென்றுவிட்டதால், குறுக்கு விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்றும், ஆகவே மேற்படி சாட்சியை Defer செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6. மேற்படி வா.சா.2 சாட்சியை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாதநிலையில் மேற்படி சாட்சியின் சாட்சியத்திற்கு Evidentiary value

ஏற்படுவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தரப்பினர்கள் தங்களது கட்சியை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வா.சா.2 சாட்சி எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையில் வா.சா.2 சாட்சியை ஒதுக்கிவைத்துவிட்டு மேற்கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க கோரும் இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாரபட்சமும் ஏற்படுவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், இயற்கைநீதி கொள்கை அடிப்படையிலும், தரப்பினர்களுக்கு அவர்களது வழக்கை எடுத்துரைக்க உரியவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரரின் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தேசிக்கிறது. ஆகவே மனுதாரர்களின் மனுவில் தகுநிலை உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களின் மனுவை செலவுத் தொகையின்றி அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த

நீதிமன்றத்தில் 20ம் நாள் செப்டம்பர் மாதம் 2023ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.09.20 19:38:44 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u>**

**இல்லை.**

**<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :—</u>**

**இல்லை.**

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.09.20 19:38:50 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**